# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19–A ருக்மினி லட்சுமிபதி சாலை, ( டிட்கோ வளாகம்),
எழும்பூர், சென்னை – 600 008
தொலைபேசி 28411376, 28411378, 28411379. தொலைநகல்: 28411377
மின்னஞ்சல்: tnercmail@gmail.com இணையதளம்: www.tnerc.gov.in


**எண். 10 / 2009**
**நாள். 04–12–2009**

## செய்திக் குறிப்பு

**தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் மற்றும் கேரள மின்சார ஒழுங்குமுறை ஆணையங்களின் 8வது மாநாட்டை மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் துவக்கி வைக்கிறார்கள்.**

தென் மாநிலங்களில் உள்ள மின்சாரம் தொடர்பான விவரங்களைக் கலந்துரையாடுவதற்காக 2007ஆம் ஆண்டு “ தென் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையாளர்கள் மன்றம் ” (Southern Electricity Regulators Forum ) பெங்களூரை தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

சுழற்சி முறையில் தென் மாநிலங்களுக்கிடையில் 3 மாதங்களுக்கு ஒருமுறை கூடுவது என்ற அடிப்படையில் தற்போது தமிழகத்தில் இதன் 8வது கூட்டம் மதுரையில் நடைபெற உள்ளது. இதற்கு முன்பு தமிழகத்தில் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் உதக மண்டலத்தில் நடைபெற்றது.

தென் மாநில மின்சார ஒழுங்குமுறையாளர்கள் மனறத்தின் 8ஆவது கூட்டம் மதுரை மாநகரில் 08–12–2009 நடைபெற உள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் திரு. எஸ். கபிலன் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் கூட்டத்தைத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றுவார்கள். மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் டாக்டர் பிரமோத் தேவ் அவர்கள் முக்கிய கருத்துரையாற்றுவார்கள்.

கர்நாடக மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் திரு. கே.பி. பாண்டே அவர்கள் தலைமையேற்பார்கள்.

(இரா. பாலசுப்பிரமணியன்)
செயலாளர்